OS. 87/2021

நாள். 24.04.2026.

பி. வா.சா.1 – பழனி

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வாதி எத்தனை இலக்க சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. தாவா 1ம் இலக்க சொத்தான சர்வே எண். 390/2 ல் கண்ட 9 ஏர்ஸ் அளவுள்ள புஞ்சை நிலம் என் தகப்பனாருக்கு 22.08.1955ம் தேதியிட்ட கிரைய பத்திரப்படி பாத்தியம் என்றால் சரிதான். என் தகப்பனார் 22 செண்டு என குறிப்பிட்டு கிரையம் வாங்குவதற்கு பதிலாக உத்தேசமாக 17 செண்டு என தவறுதலாக கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் தந்தை வழக்கு 1ம் இலக்க சொத்தில் மொத்த விஸ்தீரணம் 22 செண்டில் 6.50 செண்ட் விஸ்தீரணத்தை 02.07.2004ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் (வா.சா .ஆ.2) பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. வாதி 1ம் இலக்க சொத்தின் கீழ்புறம் 6.50 செண்டில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். என் தகப்பனார் வாதிக்கு இனாமாக எழுதிக்கொடுத்த ஆவணத்தை ஆட்சேபித்து வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் வாதிக்கு இனாமாக என் தந்தை எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என விளம்புகை செய்யக்கோரி (counter claim) தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் தாவா 1ம் இலக்க சொத்தில் கீழ்புறம் 6.47 செண்டை இனாமாக எழுதிக்கொடுத்துள்ளதால் அந்த சொத்து என் தகப்பனாருக்கு கிரையப்பாத்தியமான சொத்து என ஒப்புக்கொண்டுதான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தை என் தந்தை கிரையம் பெறும்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்து என் தகப்பனார் எவ்வாறு கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். தாவா 1ம் இலக்க

சொத்தில் என் தகப்பனார் என் சகோதரர் முருகேசனுக்கு இனாமாக எழுதிக்கொடுத்த சொத்து நீங்கலாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்து என் தகப்பனாருக்கு 20.02.1974 ம் தேதியிட்ட கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா 3,4 ம் இலக்க சொத்தும் என் தகப்பனாருக்கு 25.07.1963 மற்றும் 22.08.1963 ம் தேதியிட்ட கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்கள் புஞ்சை நிலங்கள் என்றால் சரிதான். தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்களில் வந்த வருமானம் எங்கள் குடும்ப செலவிற்குதான் போதுமானதாக இருந்தது என்றால் சரிதான். அந்த நிலங்களில் விவசாயமே செய்யவில்லை என சாட்சி கூறுகிறார். தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்களான பூர்விக சொத்துகளில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். சாட்சி அந்த சொத்துகளில் இருந்து எந்த வருமானமும் வரவில்லை என்று கூறுகிறார். என் தந்தை வாதி முருகேசனுக்கு இனாமாக எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணம் எழுதிக்கொடுத்தது பற்றி நான் யாரிடமாவது விசாரித்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் (நிரூபண வாக்குமூலத்தில்) என் தந்தை வாதிக்கு இனாம் ஆவணத்தை சுயவிருப்பத்தின்பேரில் எழுதிக் கொடுக்கவில்லை என சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை சுயமாக வாங்கிய 1ம் அயிட்ட சொத்தில் தனது கடைசி மகனான வாதிக்கு அன்பினாலும் பாசத்தினாலும் 1ம் இலக்க சொத்தில் கீழ்புறம் 6.50 சென்டை இனாமாக எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். தாவா 1முதல் 4 இலக்க சொத்துக்கள் தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் 27.04.2005ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில்

அவரது மக்களான எங்களுக்கு 1ம் இலக்க சொத்தில் இனாம் எழுதிக்கொடுத்ததை தவிர ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் பாகமும் பிரித்துக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா 10ம் இலக்க சொத்தான சர்வே எண். 531/1,2 ல் கண்ட சொத்தை எனக்கோ 2ம் பிரதிவாதிக்கோ என் தந்தை பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் 2ம் பிரதிவாதியும் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் தன்னிச்சையாக வீடு கட்டிக்கொண்டோம் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்தபிறகு நானும் என் சகோதரர்களும் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பிரித்துக்கொண்டோம், ஆவணங்கள் தான் எழுதிக்கொள்ளவில்லை. நான் பிரித்துக்கொண்டுவிட்டோம் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி மல்லிகா என் அப்பாவின் மகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிக்கும் 1,3 ,4 பிரதிவாதிகளான எங்களுக்கும் இறந்துபோன 2ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கும் தலா 1/5 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/5 பாகம் உரிமை உள்ளது என்றும் அவரது பாகத்தை பிரித்துகொடுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.